விண்ணப்ப எண்

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## தொலைநிலைக் கல்வி இயக்ககம்

### இளங்கல்வியியல் (B.Ed.,) நாட்காட்டி ஆண்டு 2020-21 (பயிற்றுமொழி: தமிழ்)

## விண்ணப்பப் படிவம்

1. பெயர் (தமிழில்)

(ஆங்கிலத்தில்)

2. முகவரி

த/பெ

அ,கு.எண்

கைப்பேசி*

புகைப்படம்

கையொப்பம்

3. பிறந்த நாள்

4. ஆதார் எண்*(நகல் இணைக்க வேண்டும்)

5. பாலினம்

| | | |
|---|---|---|
| ஆண் | பெண் | மூன்றாம் பாலினம் |

6.மின்னஞ்சல்*

7. இனம் * (நகல் இணைக்க வேண்டும்)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ST | SCA | SC | MBC/DNC | BCM | BC | OC |

8. சமயம்

| | | | |
|---|---|---|---|
| இந்து | கிறித்தவம் | இஸ்லாமியம் | பிற |

9. சிறப்புப் பிரிவினர்

| | | |
|---|---|---|
| பார்வையற்றோர் | மாற்றுத் திறனாளி | முன்னாள் இராணுவத்தினர் |
| விழுக்காடு: | விழுக்காடு: | |

10. விரும்பும் கற்றல் உதவி மையம்

| | |
|---|---|
| கரூர் | |
| மதுரை | |
| அரக்கோணம் | |
| தஞ்சாவூர் | |

**மாணவர்கள் சேர்க்கையின் அடிப்படையில், நிருவாகக் காரணங்களினால் கற்றல் உதவி மையங்களை மாற்றி வழங்குவதற்குப் பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.**

11. பாட குறியீட்டு எண்

12. விருப்பப் பாடம்

13. கல்வித் தகுதி தேர்ச்சிப் பெற்ற விவரம் :

| இளநிலைப் பாடம் | பதிவு எண் | தேர்வுற்ற நாள் | பகுதி – IIIஇல் பெற்ற மதிப்பெண் | | பயின்ற கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் |
|---|---|---|---|---|---|
| | | | மொத்தம் | பெற்றது | |
| | | | | | |

14. இளநிலை பகுதி III (முதன்மை மற்றும் துணைப்பாடம்) மூன்று ஆண்டுகளில் பெற்ற சராசரி விழுக்காடு (நான்கு தசமத்திருத்தமாக குறிப்பிடவும்)

| | | | தேர்ச்சிப் பெற்ற ஆண்டு |
|---|---|---|---|
| அ) முதுநிலைப் பட்டம் (PG Degree) | ஆம் | இல்லை | |
| ஆ) ஆய்வியல் நிறைஞர் (M.Phil., Degree) | ஆம் | இல்லை | |
| இ முனைவர் பட்டம் (Ph.D., Degree) | ஆம் | இல்லை | |

15. தொடக்ககல்வியைக் கற்பித்தலுக்கான ஆசிரியர் பயிற்சி முடித்த ஆண்டு

16. பணி அனுபவம் ஆண்டுகள்

**குறிப்பு:** விண்ணப்பத்துடன் பணிச்சான்று உட்பட அனைத்துச் சான்றிதழ்களின் சான்றொப்பமிட்ட நகல்களை இணைக்கவும்.

17. பணம் செலுத்திய விவரம் (நகல் இணைக்கவும்) மின் இரசீது செலுத்துச்சீட்டு

## <u>உறுதிமொழி</u>

1. தொலைநிலைக்கல்வி இளங்கல்வியியல் விவரக் கையேடு 2020-21 இல் உள்ள விதிமுறைகளைப் படித்து அறிந்த பின்பே இவ்விண்ணப்பத்தை நிறைவு செய்துள்ளேன்.
2. சேர்க்கைக்குத் தேவையான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளேன் என உறுதி கூறுகிறேன்.
3. இந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டியவரை உண்மை. இவ்விண்ணப்பத்தைப் பொறுத்தவரை எதுவும் மறைக்கப்படவில்லை. சேர்க்கைக்கு முன்போ அல்லது பிறகோ இவ்விவரங்கள் தவறு அல்லது உண்மைக்குப் புறம்பானது அல்லது தகுதியின்மை என அறியும் நேரத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தினால் என் மீது எடுக்கப்படும் (சட்ட நடவடிக்கை உட்பட) எவ்வித நடவடிக்கைக்கும் உட்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

* - **குறியிடப்பட்ட அனைத்து விவரங்களும் கட்டாயம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்**

இடம்:

நாள்: **விண்ணப்பதாரரின் கையொப்பம்**

2020 - 21 எண் 

# கற்பித்தல் பணி அனுபவச் சான்றிதழ்

**(சேர்க்கையின் போது தவறால் எடுத்து வரவேண்டிய சான்றிதழ்)**

1. திரு/திருமதி/செல்வி. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . என்பார் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . பள்ளியில் தற்போது இளநிலை / இடைநிலை / மழலையர் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

2. இவர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . நிறைவு பெற்ற ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் பெற்றுள்ளார்.

3. இப்பள்ளி அரசு / அரசு உதவிபெறும் / சுயநிதிப் பள்ளியாக, மைய / மாநில அரசின் அங்கீகாரத்துடன் இயங்கி வருகிறது.

4. இப்பள்ளிக்கு அரசு வழங்கிய அங்கீகார எண் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

| வ. எண். | பணியாற்றிய பள்ளியின் பெயர் | முதல் | வரை | மொத்த அனுபவம் ஆண்டுகள் | மொத்த அனுபவம் மாதங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

**தலைமையாசிரியர்/ முதல்வர் கையொப்பம்**

(நாள் மற்றும் அலுவலக முத்திரையுடன்)

கூடுதல்

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

**உயர் அலுவலர் கையொப்பம்**

**(உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்/**

**மாவட்ட கல்வி அலுவலர்/**

**மாவட்ட மெட்ரிகுலேசன் பள்ளிக்கல்வி ஆய்வாளர் /**

**மாவட்ட ஆதிதிராவிட நலஅலுவலர்)**

(நாள் மற்றும் அலுவலக முத்திரையுடன்)

**(த.பி.பா)**

| வ.எண் | **பணிபுரியும் பள்ளி ஆசிரியர்கள்** | |
|---|---|---|
| 1. | தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் | தலைமை ஆசிரியர் மற்றும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் |
| 2. | உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி | தலைமை ஆசிரியர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் |
| 3. | மெட்ரிகுலேசன் பள்ளி/மழலையர்பள்ளி | தலைமை ஆசிரியர் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிக்கல்வி ஆய்வாளர் |
| 4. | சிபிஎஸ்இ [CBSE] பள்ளி | தலைமை ஆசிரியர் மற்றும் தொடர்புடைய இயக்குநர் |
| 5. | ஆதிதிராவிட நலப்பள்ளி | மாவட்ட ஆதிராவிட நல அலுவலர் மற்றும் தலைமையாசிரியர் |

குறிப்பு: விண்ணப்பதாரரே பள்ளியின் தலைமை ஆசிரியராக இருப்பின், பணிச்சான்றிதழில் தலைமை ஆசிரியர்/முதல்வர் என்ற இடத்தில் அவரே கையொப்பமும் அலுவலக முத்திரையும் இட்டு, பின் அவருக்கு அடுத்த உயர் நிலையில் உள்ள உயர் அலுவலரிடமிருந்து அலுவலக முத்திரையுடன் கூடிய மேலொப்பத்தையும் பெற வேண்டும். (மேலும் காண்க முன்பக்கப் பணிச்சான்று)

**நேரடிச் சேர்க்கையின் போது இந்தப் பணி அனுபவச் சான்றிதழைத் தவறாமல் அளிக்க வேண்டும். அவ்வாறு அளிக்கவில்லையெனில் சேர்க்கை மறுக்கப்படும்.**

---

விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகளில் பணி அனுபவம் பெற்றிருப்பின். இப்படிவத்தினை நகல் எடுத்து பணி புரிந்த ஒவ்வொரு பள்ளிக்கும் தனித்தனியே கற்பித்தல் பணி அனுபவச் சான்றிதழ் பெற வேண்டும்.

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

# தொலைநிலைக் கல்வி இயக்ககம்

## இளங்கல்வியியல் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டிய சான்றொப்பமிட்டநகல்கள்(Attested Copy's)

- பணி அனுபவச் சான்றிதழ்(அசல்) (பல்கலைக்கழக மாதிரி படிவத்தில் உள்ளவாறு) ☐
- பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்(நகல்) ☐
- பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்(நகல்) ☐
- ஆசிரியர் பயிற்சி(D.Ted) மதிப்பெண், பட்டயச் சான்றிதழ்(நகல்) ☐
- பட்டம்(Degree) மதிப்பெண் சான்றிதழ், தற்காலிகச் சான்றிதழ் அல்லது பட்டச்சான்றிதழ்(நகல்) ☐
- சாதிச் சான்றிதழ் (நகல்) ☐
- மாற்றுச் சான்றிதழ்(T.C) (நகல்) ☐
- ஆதார் (நகல்) ☐
- அரசு/அரசு உதவிப் பெறும் பள்ளி ஆசிரியராய் இருப்பின் பணி நியமன ஆணைச் சான்றிதழ் (நகல்) ☐
- தனியார் பள்ளி ஆசிரியராய் இருப்பின் பள்ளி அடையாள அட்டை(நகல்) ☐

**இவையனைத்திற்கும் அசல் சான்றிதழ் நேரடிச் சேர்க்கையின் போது தவறாமல் கட்டாயம் எடுத்துவரவேண்டும்**

# தொலைநிலைக் கல்வி இயக்ககம்

**இளங்கல்வியியல் [B.Ed.,]**

**[NCTE அனுமதி ஆணை SRO/NCTE/B.Ed.-DE/2007-08/18616 மற்றும் DEB அங்கீகாரம் பெற்றது]**

**நாட்காட் டி யாண்டு/ கல்வியாண்டு**

**தொலைநிலைக் கல்வி முறை**

# விவரக் கையேடு

## தமிழ்ப் பல்கலைக்கழகம்

**வாகையூர், திருச்சி சாலை, தஞ்சாவூர் - 613 010**

**விலை ரூ.750/-**

**அஞ்சல் வழி விலை ரூ.800/-**

## விவரக் கேட்பு மற்றும் தொடர்புக்கு

தொலைநிலைக் கல்வி இயக்ககம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
வாகையூர், திருச்சி சாலை,
தஞ்சாவூர்-613 010

04362-227152

## தேர்வுகள் தொடர்பான விவரங்களுக்கு

தொலைநிலைக் கல்வித் தேர்வுகள்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
வாகையூர், திருச்சி சாலை,
தஞ்சாவூர்-613 010

04362-227845



**மாணவர்களின் கவனத்திற்கு**

மாணவர்கள் விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்யுமுன் இவ்விவரக் கையேட்டினை முழுமையாகப் படிக்கவும்.

**இணையதள முகவரி**

**www.tamiluniversity.ac.in / www.tamiluniversitydde.in**

## விண்ணப்பிக்கும் முன்

- *விவரக் கையேடு இணைந்த விண்ணப்பப் படிவத்தின் கட்டணம்: ரூ.750/ இப்படிவத்தை நிறைவு செய்யும் முன் விவரக் கையேட்டைக் கவனத்துடன் படித்துவிட்டுப் பின்னர் பூர்த்தி செய்யவும்.*
- **பல்கலைக்கழக இணையதளத்தில் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தின் இளங்கல்வியியல் (பி.எட்) விண்ணப்பம் இடம்பெற்றுள்ளது.**
- *அஞ்சல்வழிப் பெற விரும்புவோர் ரூ.800/- தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள* SBI COLLECT ONLINE PAYMENT *வழி தொகையை செலுத்திப் பெறலாம்.*

## விண்ணப்பதாரர் கவனத்திற்கு

1. *விண்ணப்பதாரர் தனது பகுதி*-III (Part-III) *மதிப்பெண்கள் எவையெனத் தெரிந்து செயல்பட வேண்டும். தன்னாட்சிக் கல்லூரிக்கும், ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் பகுதி* III *மதிப்பெண்கள் மாறுபடும். அவற்றை விண்ணப்பதாரரே உறுதி செய்து கொள்ள வேண்டும்.*

2. நேரடி சேர்க்கைக்கு வரும்போது பணம் கட்டியதற்கான இரசீது ( E.Receipt) எடுத்து வரவேண்டும். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்திற்குள் இயக்ககத்திற்கு வந்து சேராவிட்டாலோ, பணிச்சான்றிதழ் வரையறுக்கப்பட்ட படிவத்தில் இல்லையென்றாலோ, அறிவுறுத்திய வகையில் விண்ணப்பப் படிவம் முழுமையாக நிறைவு செய்யப்படாமல் குறையுடையதாக உள்ளது எனக் கண்டறியப்பட்டாலோ எவ்வித அறிவிப்புமின்றி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

3. *விண்ணப்பங்கள் உரிய நாள் மற்றும் நேரத்திற்குள் இயக்ககத்திற்கு வந்து சேர்வதை விண்ணப்பதாரரே உறுதி செய்து கொள்ள வேண்டும். அஞ்சல் அல்லது தனியார் அஞ்சல் (கூரியர்) வழி ஏற்படும் தாமதங்களுக்கு இயக்ககம் பொறுப்பேற்காது.*

4. *தேர்ந்தெடுக்கப்பட்டோரின் பணி அனுபவச் சான்றிதழ் உட்பட, அனைத்துச் சான்றிதழ்களும் உரிய துறைகளுக்கு அனுப்பி சரிபார்க்கப்படும். இந்நடவடிக்கையில் விண்ணப்பதாரர் அளித்த விவரங்கள் தவறானவை என அறியப்படின் அவரது சேர்க்கை இரத்து செய்யப்படுவதோடு, அவர் மீது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.*

5. **விண்ணப்பத்துடன் அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களை இணைத்தனுப்ப வேண்டும்.**

6. **கலந்தாய்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர் உரிய அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கற்பித்தல் பணி அனுபவச் சான்றிதழைக் கலந்தாய்வு அன்றே அளிக்கவில்லையெனில், சேர்க்கை கண்டிப்பாக இரத்து செய்யப்படும்.**

7. *நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தினை பல்கலைக்கழகம் வழங்கிய* **A4 அளவு உறையில்** *வைத்துப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.*

**இயக்குநர்**
**தொலைநிலைக் கல்வி இயக்ககம்**
**தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர் - 613 010**

- **சேர்க்கை விவரக் கையேடு மற்றும் விண்ணப்பம் நிர்ணயிக்கப்பட்ட நாளுக்குள் நிறைவு செய்து விண்ணப்பம் கடைசி தேதிக்குள் தொலைநிலைக் கல்வி இயக்ககத்திற்கு வந்து சேருமாறு அனுப்பிவைக்கப்பட வேண்டும். காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

## உத்தேச கால அட்டவணை

### முதலாமாண்டு

| செயல்பாடு | நாட்காட்டி ஆண்டு | கல்வியாண்டு |
|---|---|---|
| விண்ணப்ப விளம்பரம் | ஆகஸ்ட் | பிப்ரவரி |
| தொடர்பு வகுப்புகள் | பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் (12 நாட்கள்) | ஆகஸ்டு. செப்டம்பர் மற்றும் அக்டோபர்(12 நாட்கள்) |
| பயிற்சிப்பட்டறை வகுப்புகள் | மே (6 நாட்கள்) தொடர்ச்சியாக | நவம்பர் (6 நாட்கள்) தொடர்ச்சியாக |
| கற்பித்தல் பயிற்சி | முதல் பயிற்சிப்பட்டறைக்குப் பின்னும் இரண்டாவது பயிற்சிப்பட்டறைக்கு முன்னும் | |
| தேர்வு | டிசம்பர் | மே |

### இரண்டாமாண்டு

| செயல்பாடு | நாட்காட்டி ஆண்டு | கல்வியாண்டு |
|---|---|---|
| தொடர்பு வகுப்புகள் (சனி,ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாள்களில்) | பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் (12 நாட்கள்) | ஆகஸ்டு, செப்டம்பர் மற்றும் அக்டோபர்(12 நாட்கள்) |
| பயிற்சிப்பட்டறை வகுப்புகள் | மே (6 நாட்கள்) தொடர்ச்சியாக | நவம்பர் (6 நாட்கள்) தொடர்ச்சியாக |
| தேர்வு | டிசம்பர் | மே |

குறிப்பு: மேற்கூறிய கால அட்டவணை நிர்வாக காரணங்களுக்காக தேவைப்பட்டால் மாறுதலுக்கு உட்பட்டது.

## 1. சேர்க்கைக்கான தகுதிகள்

**1. 1. பணி அனுபவம்**

- **தொடக்கக்கல்வி கற்பித்தலுக்கான ஆசிரியர் பயிற்சியை முடித்திருக்க வேண்டும் (Trained in service teachers in elementary education)**

- **ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருப்போர் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.**

- *விண்ணப்பதாரர் 10+2+3 அல்லது 11+1+3 முறையில் பயின்று இருக்க வேண்டும். பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்குப் பின் இரண்டு ஆண்டுகள் முழுநேர ஆசிரியர் பயிற்சி* **(D.T.Ed)** *தகுதியுடன், மூன்றாண்டுகள் இளநிலைப் பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.*
- *கீழ்க்காணும் படிப்பு பயின்றவர்களும்* NCTE *வழிகாட்டுதலின்படி* B.Ed., *படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம்.*

1. Diploma in early childhood education programme leading to Diploma in Preschool Education **(DPSE)**.

2. Elementary teacher education programme leading to Diploma in Elementary Education **(D.El.Ed)**.

3. Bachelor of physical education programme leading to Bachelor of Physical Education **(B.P.Ed)**.

4. Master of physical education programme leading to Bachelor of Physical Education

**(M.P.Ed)**.

5. Diploma in Arts Education (Visual Arts) Programme leading to Diploma in Arts Education **(Visual Arts)**.

6. Diploma in Arts Education (Performing Arts) Programme leading to Diploma in Arts Education**(Performing Arts)**.

**1.2. கல்வித் தகுதி**

- *விண்ணப்பதாரர்களுக்கு உரிய கல்வித் தகுதிகளும் பாடக்குறியீடுகளும் பக்க எண் 6,7 இல் உள்ள அட்டவணையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.*

- *ஐந்து ஆண்டுகள் தொடர்நிலையில் நேரடியாக முதுநிலைப் பட்டம்* (Integrated PG degree) *பெற்றுப் பணியாற்றும் ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.*

- *மூன்று ஆண்டு இளநிலைப் பட்டப்படிப்பில் இரண்டு அல்லது மூன்று முதன்மைப் (double or triple major) பாடங்களைப் பயின்றிருந்தால் அவற்றுள் ஏதேனும் ஒரு முதன்மைப் பாடத்தின் அடிப்படையில் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் .*
- NCTE *வழிகாட்டுதலின்படி இளங்கலை பாடத்தில் 50 விழுக்காட்டிற்கு(50%) மேல் மதிப்பெண் பெற்றவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.*

**1.3 விண்ணப்பிக்கத் தகுதியற்றோர்**

- *மேல்நிலைப்பள்ளிக் கல்வித்தகுதி (+2) இல்லாமல் திறந்தநிலை முறையில் (Open University System) நேரடியாக இளநிலைப் பட்டம் பெற்றவர்களும் இளநிலைப் பட்டம் பெறாமல் நேரடியாக முதுநிலைப் பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.*

- *பக்கம் 7,8 இல் குறிப்பிட்டுள்ள பாடப் பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களைத் தவிர ஏனைய பாடங்களைப் பயின்றவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்.*
- *பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு, இளநிலை (UG) வகுப்பு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் தமிழை ஒரு பாடமாகப் பயிலாதவர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவார்.*

**1.4. படிப்பின் கால அளவு**

- *தொலைநிலை இளங்கல்வியியல் பட்டப் படிப்பின் காலம்* **இரண்டு ஆண்டுகள்** *(நாள்காட்டி ஆண்டு - சனவரி முதல் டிசம்பர் வரை, கல்வியாண்டு-ஜூலை முதல் ஜூபன் வரை). இப் படிப்பில் சேரும் மாணவர்கள்* **நான்கு ஆண்டுகளுக்குள்** *தங்கள் படிப்பினை முடிக்க வேண்டும்.*

**1.5. பயிற்று மொழி**

- *ஆங்கிலப் பாடம் தவிர பிற பாடங்கள் அனைத்தும் தமிழ் வழியில் மட்டுமே கற்பிக்கப்படும்.*

## 2. சேர்க்கை விதிமுறைகள்

### 2.1 இட ஒதுக்கீடு

- தமிழக அரசின் இடஒதுக்கீட்டின் அடிப்படையில் சேர்க்கை நடைபெறும்.
- எந்தப் பாடத்திலேனும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வகுப்பினரில் சேர்க்கைக்குப் போதுமான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவில்லையெனில், அவ்விடங்கள் இதர பாடப்பிரிவில் வாய்ப்பைப் பெறாமல் உள்ள அதே வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

| வகை | | இட ஒதுக்கீட்டு விழுக்காடு |
|---|---|---|
| • பொதுப்போட்டியினர் | (OC) | 31.0 %<br>(தமிழகத்தைச் சார்ந்த முன்னாள் படை வீரரின் மகன் அல்லது மகளுக்கு 1% ம், மாற்றுத்திறனாளிக்கு (differently abled) 3% ம்* இதில் அடங்கும்).<br>இவர்கள் தர வரிசைப் பட்டியலின்படி பொதுப் போட்டியில் வைக்கப்படுவர். |
| • பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | (BC) | 26.5 % |
| • பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | (BCM) | 03.5 % |
| • மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் | (MBC/DNC) | 20.0 % |
| • ஆதி திராவிடர் | (SC) | 15.0 % |
| • ஆதி திராவிடர் (அருந்ததியர்) | (SCA) | 03.0 % |
| • பழங்குடியினர் | (ST) | 01.0 % |

* **மாற்றுத்திறனாளியின் மாற்றுத் திறன் விழுக்காட்டின் (Disability percentage) அடிப்படையில் சேர்க்கை அமையும். எனவே, இவ்விண்ணப்பதாரர்கள் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு, நல அலுவலரிடமிருந்து (Department of Rehabilitation of the Disabled) பெறப்பட்ட பதிவுப் புத்தகத்தைக் கலந்தாய்வு அன்றே தவறாமல் அளிக்க வேண்டும்.**

* **சிறப்புப்பிரிவினர்**

மாற்றுத்திறனாளிக்குக் கீழ்க்காணும் வகையில் ஒதுக்கீடு அளிக்கப்படும்.

1. பார்வையற்றோர் - 1%
2. பிற மாற்றுத்திறனாளிகள் - 2%

அ) மேற்குறிப்பிட்ட சிறப்புப்பிரிவினரில் போதுமான அளவிற்கு விண்ணப்பங்கள் பெறப்படாவிடில், இயக்ககத்தில் பெறப்பட்ட மாற்றுத் திறனாளி விண்ணப்பங்களுக்கு மேற்குறிப்பிட்ட விழுக்காடு அளவு மாற்றி அளிக்கப்படும்.

ஆ) ஒரே விழுக்காடு அளவைக் கொண்ட மாற்றுத்திறன் பெற்ற விண்ணப்பதாரர்களுள் சமநிலை ஏற்படும்போது (tie), பிற இனப் பிரிவினரில் மேற்கொள்ளப்படும் நடைமுறையே பின்பற்றப்படும்.

| வ. எண். | இனம் | இனச் சான்றிதழ் வழங்கத் தகுதியுடைய அலுவலர் |
|---|---|---|
| 1. | பழங்குடியினர் | வருவாய்க் கோட்ட அலுவலர்/மாவட்ட உதவி ஆட்சியர்/மாவட்ட சார் ஆட்சியர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் |
| 2. | ஆதி திராவிடர் வகுப்பினர் /ஆதி திராவிடர் (அருந்ததியர்) | வட்டாட்சியர் |
| 3. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், இஸ்லாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத வருவாய்த்துறை அலுவலர் அல்லது தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் அல்லது சாதிச் சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்புத் துணை வட்டாட்சியர்/ கூடுதல் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், மண்டலத் துணை வட்டாட்சியர் |
| 4. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர் மரபினர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொட்டிய நாயக்கர் (ராஜ கம்பளம், கொல்லவர், சில்லவர், தொக்களவர், தொழுவ நாயக்கர் மற்றும் எர்ரகொல்லார் உட்பட) | தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் |

## 3. பாடப்பிரிவுக் குறியீடும், மாணவர் இடஒதுக்கீடும்*

* **ஒரு குறிப்பிட்ட பாடப்பிரிவில் போதிய அளவு விண்ணப்பங்கள் பெறப்படாவிடில், அப்பாடப்பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் பிற பாடப்பிரிவிற்கு மாற்றி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் பெறப்படும் விண்ணப்பங்களுக்கேற்ப ஒதுக்கீட்டு விழுக்காடு மாற்றியமைக்கப்படும்.**

| பாடப் பிரிவுகள் | | ஒதுக்கீட்டு விழுக்காடு |
|---|---|---|
| **தமிழ் பாடக்குறியீட்டு எண் - 01** | | |
| *தமிழ்/ தமிழ் இலக்கியம்* | *(B.A.Tamil/B.Litt)* | 40 % |
| **ஆங்கிலம் பாடக்குறியீட்டு எண் - 02** | *(English)* | 10 % |
| *ஆங்கில இலக்கியம் (B.A.Engish)* | | |
| **கணிதம் பாடக்குறியீட்டு எண் - 03** | | 10 % |
| *கணிதம்* | *(Mathematics)* | |
| *பயன்பாட்டுக் கணிதம்* | *(Applied Mathematics)* | |
| **அறிவியல் பாடக்குறியீட்டு எண் - 04** | | 10 % |
| *கணினி அறிவியல்* | *(B.Sc.Computer Science)* | |
| *கணினி பயன்பாட்டியல்* | *(BCA)* | |
| *தகவல்தொழில்நுட்பவியல்* | *(B.Sc.IT)* | |
| *இயற்பியல்* | *(Physics)* | |
| *பயன்பாட்டு இயற்பியல்* | *(Applied Physics)* | |
| *மின்னணுவியல்* | *(Electronics)* | |
| *புவி இயற்பியல்* | *(Geophysics)* | |
| *உயிரி இயற்பியல்* | *(Biophysics)* | |
| *வேதியியல்* | *(Chemistry)* | |
| *உயிரி வேதியியல்* | *(Biochemistry)* | |
| *பயன்பாட்டு வேதியியல்* | *(Applied Chemistry)* | |
| *தாவரவியல்* | *(Botany)* | |
| *தாவர உயிரியல்* | *(Plant Biology)* | |
| *சுற்றுச்சூழல் அறிவியல்* | *(Environmental Science)* | |
| *உயிரிநுட்பவியல்* | *(Biotechnology)* | |
| *தாவர உயிரி நுட்பவியல்* | *(Plant Biotechnology)* | |
| *விலங்கியல்* | *(Zoology)* | |
| *நுண்ணுயிரியல்* | *(Microbiology)* | |

| பாடப் பிரிவுகள் | | ஒதுக்கீட்டு விழுக்காடு |
|---|---|---|
| **சமூக அறிவியல் பாடக்குறியீட்டு எண் - 05** | | 30 % |
| வரலாறு | (History) | |
| புவியியல் | (Geography) | |
| பயன்பாட்டுப் புவியியல் | (Applied Geography) | |
| முதுநிலை மனை அறிவியல் * | (M.Sc. Home science) | |
| முதுநிலைப் பொருளியல் * | (M.A Economics) | |
| முதுநிலை வணிகவியல் * | (M.Com Commerce) | |
| முதுநிலை அரசியல் அறிவியல் * | (M.A Political Science) | |
| முதுநிலைச் சமூகவியல் * | (M.A Sociology) | |
| முதுநிலை உளவியல் * | (M.A./M.Sc. Psychology) | |
| முதுநிலைத் தத்துவவியல் * | (M.A Philosophy) | |
| முதுநிலைத் தர்க்கவியல் * | (M.A. Logic) | |
| முதுநிலை இந்தியப் பண்பாடு * | (M.A. Indian Culture) | |

1. * இக்குறியீட்டு விண்ணப்பதாரர்கள் முதுநிலைப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். இம்மாணவர்கள் இளநிலையில், தொடர்புடைய பாடப்பிரிவில் பயின்றிருக்க வேண்டும். மாற்றுப் பாடத்தில் இளநிலைப் பட்டம் பெற்றவராயின் (cross major) அவர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவார்.

2. ஒவ்வொரு பாடப்பிரிவிலும் போதுமான விண்ணப்பங்கள் பெறப்படாவிட்டாலும், விண்ணப்பதாரர்கள் இருந்தும் கலந்தாய்வின்போது நிராகரிக்கப்படுவதால் ஏற்படும் காலி இடங்கள், விண்ணப்பதாரர்கள் கலந்தாய்விற்கு வராமையால் ஏற்படும் காலி இடங்கள் ஆகியவை அவ்வவ் இடஒதுக்கீட்டிற்கேற்ப தமிழ்ப் பாடப் பிரிவிற்கு மாற்றி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. மேற்காணும் பட்டியலில் உள்ள பாடங்களில் பட்டம் பெற்று இளங்கல்வியியல் பயிலும் ஆசிரிய மாணவர்களுக்குச் சமூக அறிவியலில் இளங்கல்வியியல் பயின்றார் எனச்சான்றிதழ் வழங்கப்படும்.

## 4.தொடர்பு வகுப்பு மையங்கள்

### நாட்காட்டியாண்டு

| | |
|---|---|
| **கரூர்**<br>அரசு மகளிர் கல்வியியல் கல்லூரி<br>பண்டுதகாரன் புதூர்,<br>மண்மங்கலம் -அஞ்சல்,<br>கரூர்-639 006. | 9367136195<br>9994300304 |
| **தஞ்சாவூர்**<br>கல்வியியல் கல்லூரி,<br>தமிழ்ப் பல்கலைக்கழகம்,<br>தஞ்சாவூர் -613 010 | 04362-227152/ 434 |
| **அரக்கோணம்**<br>விவேகானந்தா வித்யாலயாகல்வியியல் கல்லூரி,<br>காவனூர் கிராமம்,<br>அரக்கோணம் தாலுக்கா<br>வேலூர் மாவட்டம் 631 004 | 8610790714<br>9444325777 |
| **மதுரை**<br>ஆறுமுகம் நல்லமணி மகளிர் கல்வியியல் கல்லூரி<br>டுவாட் ( TWAD) காலனி, பொறியாளர் நகர்,<br>திருமால்புரம் (அஞ்சல்)<br>திருப்பாலை, மதுரை-14 | 0452-2681016 |

### கல்வியாண்டு

| | |
|---|---|
| **தருமபுரி**<br>பச்சமுத்து கல்வியியல் கல்லூரி,<br>கிருஷ்ணகிரி மெயின் ரோடு,<br>தருமபுரி. | 04342 - 2688882 |
| **விருதுநகர்**<br>அரசன் கணேசன் கல்வியியல் கல்லூரி<br>எண் 18 சேர்மன் ஏ, சண்முகம் ரோடு<br>சிவகாசி, விருதுநகர்- 626 123 | 04562-220117 |
| **சென்னை**<br>லேடி வில்லிங்டன் கல்வியியல்<br>உயராய்வு நிறுவனம்<br>திருவல்லிகேணி, சென்னை | 044-28445531 |
| **தஞ்சாவூர்**<br>கல்வியியல் கல்லூரி<br>தமிழ்ப் பல்கலைக்கழகம்,<br>தஞ்சாவூர் -613 010 | 04362- 227152 |
| **மயிலாடுதுறை**<br>பெஸ்ட் கல்வியியல் கல்லூரி<br>மெயின் ரோடு, மல்லியம்,<br>மயிலாடுதுறை-609 806 | 9944432652 |

இளங்கல்வியியல் திட்ட நிரலானது அறிமுறை (Theory) மற்றும் செய்முறை (Practical) பாடங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பிரிவு 'அ' உள்ளக் கடவைகள் (Core Courses)

பிரிவு 'ஆ' பயிற்றுவியல் கடவைகள் (Pedagogical Courses)

பிரிவு 'இ' ஆசிரியர் தொழில் திறன் மேம்பாடு (Teacher Competency Development)

**இளங்கல்வியியல் முதலாமாண்டு கலைத்திட்டம்**

| வ.எண் | பாடக்குறியீடு | பாடங்கள் (Subjects) பெயர்கள் |
|---|---|---|
| 1. | இகஉக 1 | அடிப்படை கல்வித் தத்துவமும் சமூகவியலும் |
| 2. | இகஉக 2 | கல்வி உளவியல் |
| 3. | இகஉக 3 | கற்றலில் மதிப்பீடு |
| 4. | இகஉக 4 | தகவல் தொடர்பு நுட்பவியல் |
| **தெரிவுக் கடவைகள் (ஏதாவது ஒன்று) (Elective Courses)** | | |
| 5. | இகதெக 1 | சுற்றுச்சூழல் கல்வி |
| | இகதெக 2 | வழிகாட்டல் மற்றும் அறிவுரை பகர்தல் |
| | இகதெக 3 | மனித உரிமைக் கல்வி |
| **பயிற்றுவியல் கடவைகள் (Subjects) (ஏதாவது ஒன்று)** | | |
| 6. | இகபக 1 | தமிழ் கற்பித்தல் |
| | இகபக 2 | ஆங்கிலம் கற்பித்தல் |
| | இகபக 3 | கணிதம் கற்பித்தல் |
| | இகபக 4 | அறிவியல் கற்பித்தல் |
| | இகபக 5 | சமூக அறிவியல் கற்பித்தல் |

**இளங்கல்வியியல் இரண்டாமாண்டு கலைத்திட்டம்**

| வ.எண் | கடவைக்குறியீடு | பாடத்தின் பெயர் |
|---|---|---|
| *7.* | இகஊக *7* | கலைத்திட்ட வளர்ச்சி மற்றும் மேம்பாடு |
| *8.* | இகஊக *8* | ஆசிரியர் கல்வி |
| *9.* | இகஊக *9* | கல்வியியல் நிருவாகம் மற்றும் மேலாண்மை |
| **விருப்பப்பாடம் (ஏதாவது ஒன்று)** | | |
| *10.* | இகபக *1* | தமிழ் கற்பித்தல் |
| | இகபக *2* | ஆங்கிலம் கற்பித்தல் |
| | இகபக *3* | கணிதம் கற்பித்தல் |
| | இகபக *4* | அறிவியல் கற்பித்தல் |
| | இகபக *5* | சமூக அறிவியல் கற்பித்தல் |

**5. மைய இட ஒதுக்கீடு**

- தொடர்பு வகுப்பு மைய ஒதுக்கீட்டில் விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் தாமே தேர்வு செய்யலாம். கலந்தாய்விற்குப் பின்னர் ஒவ்வொரு மையத்திற்கும் 100 மாணவர்கள் என ஒதுக்கீடு செய்யப்படுவர்.ஆயினும் இயக்ககத்தின் முடிவே இறுதியானது,

- நிர்வாகக் காரணங்களுக்காக, விளக்கக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள எந்தத் தொடர்பு வகுப்பு மையத்தையும் மாற்றுவதற்கோ, நீக்குவதற்கோ, புதிய மையங்களைத் தோற்றுவிப்பதற்கோ பல்கலைக்கழகத்திற்கு முழு உரிமை உண்டு.

**கட்டண விவரம்**

- தற்காலிகமாகச் சேர்க்கைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சேர்க்கை உறுதி செய்யப்பட்டவுடன் பின்வரும் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.
- கற்பித்தல் மற்றும் பாடங்களுக்கான மொத்தக் கட்டணம் முதலாம் ஆண்டிற்கு **ரூ.28,300/-**; இரண்டாம் ஆண்டிற்கு **ரூ.28,000/-**.
- **ஒரு முறை செலுத்திய கட்டணம் திருப்பி அளிக்கப்படமாட்டாது.**

**கல்விக் கட்டணப் பங்கீட்டு விவரம்**

| **கட்டண விவரம்** | **முதலாமாண்டு** (ரூபாய்) | **இரண்டாமாண்டு** (ரூபாய்) |
|---|---|---|
| நுழைவுக் கட்டணம் | 250 | -- |
| சிறப்புக் கட்டணம் | 500 | 500 |
| கல்விக் கட்டணம் | 21000 | 21,000 |
| பிற பல்கலைக்கழகப் படிப்பு அங்கீகரிப்புக் கட்டணம் | 250* | -- |
| பிற கட்டணங்கள் | 5,800 | 6,500 |
| முன்னாள் மாணவர் நலச்சங்க நிதி | 500 | -- |
| **கூடுதல் ...** | **28,300** | **28,000** |

* 1. பிற மாநிலங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றோர் ரூ.250க்குப் பதிலாக ரூ.400-ஐ செலுத்த வேண்டும். எனவே இவர்களின் படிப்புக் கட்டணம் 28,450/-

2. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றோர் ரூ.250க்குப் பதிலாக ரூ.900-ஐ செலுத்த வேண்டும். எனவே இவர்களின் படிப்புக் கட்டணம் ரூ.28,950/-

## 6. பணிச்சான்று மறுக்கப்படுவதற்கான காரணம்

7.1 அரசு வழங்கிய பள்ளி அங்கீகாரம் எண் குறிப்பிடப்படாத பணிச்சான்றும், விவரக் கையேட்டுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் இல்லாமல் வேறுபடிவத்திலுள்ள பணிச்சான்றும் (கலந்தாய்வு அன்று) நிராகரிக்கப்படும். சேர்க்கைக்கான தெரிவும் இரத்து செய்யப்படும்.

7.2 தலைமை ஆசிரியர் மற்றும் உரிய உயர் அலுவலர் அவர்களிடமிருந்து அலுவலக முத்திரையுடன் கூடிய கையொப்பமும், மேலொப்பமும் பெறாத பணி அனுபவச் சான்று, விண்ணப்பதாரர் தற்போது பணிபுரிந்து வருவதற்கான குறிப்பைத் தெளிவாக்காத பணி அனுபவச் சான்று ஆகியவை கலந்தாய்வின்போது நிராகரிக்கப்படும். சேர்க்கைக்கான தெரிவும் இரத்து செய்யப்படும்.

## 7. பிற காரணங்கள்

**மேற்குறிப்பிட்ட காரணங்களைத் தவிர, சேர்க்கைத் தொடர்பாகக் கலந்தாய்வின்போதோ அதற்குப் பின்னரோ எழும் சிக்கல்களுக்குப் பல்கலைக்கழகம் எடுக்கும் முடிவே இறுதியானதாகும்.**